

கலைஞர் 100

1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 283 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 10 – சனிக்கிழமை 24 மே 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 283 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 10 - Sautrday 24 May 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## அமலாக்கத்துறை அனைத்து வரம்புகளையும் மீறிச் செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது!

# ‘டாஸ்மாக்’ தொடர்பான அமலாக்கத்துறை விசாரணைக்குத் தடை!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!



**புதுடெல்லி, மே 24-**

**டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு தடை விதித்து உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. அனைத்து வரம்புகளையும் மீறி கூட்டாட்சி அமைப்பையே அமலாக்கத்துறை சிதைத்துவிட்டதாக நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

அதன் விவரம் வருமாறு:-

டாஸ்மாக் தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பிலும், டாஸ்மாக் நிறுவனம் சார்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் ஆஜராகி வாதிட்டார்.

டாஸ்மாக் விவகாரத்தில் 2017 முதல் 2021 வரை தனிநபர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், திடீரென 2025ஆம் ஆண்டு அமலாக்கத்துறை இந்த வழக்கிற்குள் நுழைந்து வழக்குப்பதிவு செய்துள்ளது.

### மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் வாதம்!

லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்திக்கொண்டிருக்கும் போது அமலாக்கத்துறை தலையிட்டது ஏன்? என்றும் தமிழ்நாடு அரசுத் தரப்பில் வாதிடப்பட்டது.

“தனி நபர்கள் சம்பந்தப்பட்ட இந்த விவகாரத்தில் டாஸ்மாக் நிர்வாகத்தின் மீதே குற்றம்சாட்டப்பட்டுள்ளது” என்று மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் வாதிட்டார்..

டாஸ்மாக் நிர்வாகத்தின் அதிகாரிகளின் வீடுகள் மற்றும் டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இது முழுமையான விதிமீறல் மற்றும் அத்துமீறல் என்றும் கபில் சிபல் வாதிட்டார்.

### தொலைபேசிகள் ஒட்டுக்கேட்பு!

டாஸ்மாக் பணியாளர்கள் அனைவருடைய தொலைபேசி எண்களையும் அமலாக்கத்துறை ஒட்டுக்கேட்டு வருகிறது அமலாக்கத்துறையின் செயல்பாட்டால் டாஸ்மாக் ஊழியர்களின் தனி உரிமை பாதிக்கப்பட்டுள்ளது அது குறித்தும் விசாரிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

> **“கூட்டாட்சித் தத்துவத்தை அமலாக்கத்துறை சிதைத்து விட்டது”**

**இதனைத் தொடர்ந்து, அமலாக்கத்துறையின் செயல்பாடுகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதிகள்,**

**“கூட்டாட்சித் தத்துவத்தை அமலாக்கத்துறை சிதைத்துள்ளது” என்று சாடினர்.**

**அமலாக்கத்துறை அனைத்து எல்லைகளையும் தாண்டி, வரம்பு மீறிச் செயல்படுகிறது என்றும் நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.**

### தனி நபர்கள் சம்பந்தப்பட்ட விவகாரம்!

**“லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை நடத்திக்கொண்டிருக்கும் போது அமலாக்கத்துறை தலையிட்டது ஏன்? எந்த மூல வழக்கின் அடிப்படையில் அமலாக்கத்துறை நடவடிக்கை எடுத்தது? தனி நபர்கள் சம்பந்தப்பட்ட இந்த விவகாரத்தில், ஒரு நிர்வாகத்தின் மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்?” என்றும் அமலாக்கத்துறைக்கு உச்சநீதிமன்றம் சரமாரியாக கேள்விகளை எழுப்பியது.**

**டாஸ்மாக் விவகாரத்தில் அமலாக்கத்துறையின் சோதனைகளுக்கும், விசாரணைக்கும் தடைவிதிப்பதாகத் தெரிவித்த நீதிபதிகள், வழக்கில் பதிலளிக்குமாறு அமலாக்கத்துறைக்கு நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர்.**

கோடை விடுமுறைக்குப் பின்னர் ஜூலை மாதத்தில் மீண்டும் விசாரணை நடைபெறும் என்று அறிவித்து வழக்கை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

டாஸ்மாக் தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறைக்கு உச்சநீதிமன்றம் சரியான சம்மட்டி அடி கொடுத்திருப்பதாக கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டாஸ்மாக் தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்திருப்பது வரவேற்கத்தக்கது என தெரிவித்தார். தனிநபர் செய்த செயலுக்காக நிர்வாகம் மீது அமலாக்கத்துறை நடவடிக்கை எடுத்ததற்கு கண்டனம் தெரிவித்தார். தமிழ்நாடு அரசுக்கு களங்கம் விளைவிக்கவே அமலாக்கத்துறை சோதனை செய்ததாகவும்,

விசாரணை அமைப்புகளை தவறாக பயன்படுத்துவதை ஒன்றிய பா.ஜ.க. அரசு இனியாவது நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.5.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சென்னை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட “உலகெங்கும் கலைஞர்” எனும் நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவரும், சட்டக்கதிர் ஆசிரியரும், நூல் தொகுப்பாசிரியருமான டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், கழக வழக்கறிஞர் அணித் தலைவர் ஆர். விடுதலை மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தங்க நகை அடமானம்: புதிய விதிமுறைகளைக் கொண்டுவந்து சாமானியர்களின் தலையில் இடியை இறக்கி இருக்கிறது ரிசர்வ் வங்கி!

## அத்தியாவசியமற்ற ஆதாரங்களைக் கேட்டு அலைக்கழிக்கும் புதிய நடைமுறையைக் கைவிடுக!

### தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!



**சென்னை, மே 24-**

**தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில், “தங்க நகை அடமானம் வைப்பதில் இந்திய ரிசர்வ் வங்கி, அத்தியாவசியமற்ற விவரங்களையும் ஆதாரங்களையும் கேட்டு அலைக்கழிக்கும் புதிய நடைமுறையை உடனடியாகக் கைவிட வேண்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தங்க நகை அடமானம் வைப்பதில் பல புதிய விதிமுறைகளைக் கொண்டு வந்து சாமானியர்களின் தலையில் இடியை இறக்கி இருக்கிறது ரிசர்வ் வங்கி.

ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களே பெரும்பாலும் தங்களது அவசரத் தேவைகளுக்கு தங்க நகைக் கடன் போன்றவற்றைச் சார்ந்திருக்கும் சூழலில் அதன் மீது இந்திய ரிசர்வ் வங்கி விதித்திருக்கும் புதிய விதிமுறைகள் சாமானிய மக்களை பாதிக்கும் செயலாக அமைந்துள்ளது.

குறிப்பாக நகையின் மதிப்பில் முன்பை விட 5% குறைத்து, 75% தான் கடன் வழங்கப்படும் என்ற புதிய விதிமுறை அவசரத் தேவைக்காக வங்கிகளை நாடிவரும் மக்களை நேரடியாகப் பாதிக்கும் முடிவாகும். அவசரம் என்று வரும் மக்களை அத்தியாவசியமற்ற விவரங்களையும், ஆதாரங்களையும் கேட்டு அலைக்கழிக்கும் இந்த புதிய நடைமுறையை மத்திய ரிசர்வ் வங்கி உடனடியாக கைவிட வேண்டும்.

அடமானம் வைத்த நகையை முழுவதுமாக மீட்ட பிறகே மீண்டும் அந்த நகையை அடமானம் வைக்க முடியும் என்ற புதிய விதிமுறையைக் கடந்த மாதம் இந்திய ரிசர்வ் வங்கி கொண்டு வந்த அதிர்ச்சியிலிருந்து மக்கள் இன்னும் மீளாத நிலையில், தற்போது மேலும் புதிய 9 விதிமுறைகள் என்ற பெயரில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்துள்ளது, நேரடியாக ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் செயலாகும். இந்திய ரிசர்வ் வங்கி உடனே இத்தகைய கட்டுப்பாடுகளைத் திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மும்பை - அகமதாபாத்தில் கொரோனா தொற்று!


*புதுடெல்லி, மே 24-*

ஹாங்காங், சிங்கப்பூர் உள்ளிட்ட ஆசிய நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகிறது. இந்நிலையில், இந்தியாவின் மும்பை, அகமதாபாத் உள்ளிட்ட நகங்களிலும் கொரோனா பாதிப்பு கணிசமாக அதிகரித்து வருகிறது. எனினும், முந்தைய கொரோனா அலையுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவு ஆகும்.

மகாராஷ்டிர மாநிலத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 106 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக மும்பையில் மே மாதத்தில் மட்டும் 95 பேர் பாதிக்கப்பட்டனர். 16 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா பரவலைத் தடுக்க, காய்ச்சல் அறிகுறி உள்ள அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

## காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை!

# ஒகேனக்கலுக்கு நீர் வரத்து அதிகரிப்பு!



*சென்னை, மே 24-*

வங்கக்கடல் மற்றும் அரபிக்கடலில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. மேலும் கர்நாடக மற்றும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான ஓசூர், கனகபுரா, தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, கேரட்டி, ராசி மணல், பிலி குண்டுலு உள்ளிட்ட பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கலுக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதனிடையே ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை நிலவரப்படி ஒகேனக்கல்லுக்கு வரும் நீரின் அளவு 14.000 கன அடியாக அதிகரித்துள்ளது. காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக ஒகேனக்கல்லுக்கு வரும் நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஒகேனக்கல்லுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதால் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்ட தொடங்கியது. மேலும் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. இந்த நீர்வரத்தை காவிரி நுழைவிடமான தமிழக கர்நாடக மாநில எல்லையான பிலிகுண்டுலுவில் ஒன்றிய நீர்வளத்துறை அதிகாரிகள் அளந்து கண்காணித்து வருகின்றனர்.

## அரபிக்கடலில், குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி!

*புதுடெல்லி, மே 24-*

இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

“அரபிக்கடலில் நிலவி வந்த வளிமண்டல காற்றழுத்த மேலடுக்கு சுழற்சி நேற்று முன்தினம் காலை குறைந்த காற்றழுத்தப் பகுதியாக உருவானதாகத் தெரிவித்துள்ளது.

வடக்கு கர்நாடகா, கோவா கடற்கரை இடையே நிலைகொண்டுள்ள இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, வடக்கு நோக்கி நகர்ந்து, அடுத்த 36 மணிநேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஓரிரு நாட்களில் கேரளாவில் தென்மேற்குப் பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாகவும், இதன் காரணமாக, கேரளா, கர்நாடக மாநிலங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.